2019-20 விவரக்கையேடு

* கல்வியாண்டில் சேர்க்கை பெற்ற மாணவர்களுக்குரிய தொடர்பு வகுப்புகள் 'பிப்ரவரி' திங்கள் தொடங்கி நடத்தப்படும். தேர்வுகள் 'மே' திங்கள் 2ஆம் வாரத்தில் நடைபெறும்.

* நாள்காட்டி ஆண்டில் சேர்க்கை பெற்ற மாணவர்களுக்குரிய தொடர்பு வகுப்புகள் 'செப்டம்பர்' திங்கள் தொடங்கி நடத்தப்படும். தேர்வுகள் 'திசம்பர்' திங்கள் இறுதி வாரத்தில் நடைபெறும்.

* நாள்காட்டி ஆண்டில் ஒவ்வொரு பாடப்பிரிவிலும் போதிய எண்ணிக்கையிலான சேர்க்கை செய்யப்பெற்றால் மட்டுமே அவர்களுக்குரிய தொடர்பு வகுப்புகளும்/தேர்வுகளும் மேற்குறிப்பிட்டுள்ளவாறு நடைபெறும்.

* நாள்காட்டி ஆண்டில் சேர்க்கை பெற்ற மணவர்களுக்கு உரிய தொடர்பு வகுப்புகள் போதிய சேர்க்கை இல்லாத நிலை/ நிர்வாகக் காரணங்கள் ஏற்படின் அவ்வகுப்புகள் கல்வியாண்டில் நடைபெறும் வகுப்பின்போது சேர்த்து நடத்தப்படும்.

* மேற்குறிப்பிட்டுள்ளவாறு மாணவர்களுக்குரிய தொடர்பு வகுப்புகளும், தேர்வுகளும் நடைபெறுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும். தவிர்க்க இயலாத சூழலில் தொடர்பு வகுப்புகளையும், தேர்வுகளையும் மாற்றி அமைத்துக் கொள்ளப் பல்கலைக்கழக நிருவாகத்திற்கு முழு உரிமையுண்டு.

## பொதுத் தகவல்கள்

### விண்ணப்பங்கள் பூர்த்தி செய்யும் முறை

- விண்ணப்பத்தினை நிரப்புமுன் குறிப்பேட்டில் தெரிவிக்கப்பட்டுள்ள விவரங்களைக் கவனமுடன் படித்திடுக.
- விண்ணப்பிக்கும் பாடத்திற்குத் தேவையான கல்வித் தகுதி தங்களுக்கு இருக்கிறதா என்பதை உறுதி செய்து கொள்ளவும். (காண்க-பக். 3-6)
- விண்ணப்பிக்கும் பாடம், குறியீட்டு எண், விருப்பப் பாடம், கல்வி மற்றும் தகவல் மையம் (இருப்பின்) ஆகிய விவரங்களை விண்ணப்பத்தில் தெளிவாகக் குறிப்பிடவும்.
- **விண்ணப்பப் படிவங்கள் யாவும் தமிழிலேயே நிரப்பப்பட வேண்டும்.**
- விண்ணப்பப் படிவத்தில் தெரிவிக்கப்பட்ட விவரங்கள் இணைக்கப்பட்ட சான்றுகளுடன் மாறுபட்டிருப்பின், அவ்விண்ணப்பப் படிவம் நிராகரிக்கப்படும். செலுத்தப் பட்ட கட்டணத் தொகையும் மீள வழங்கப்படமாட்டாது.
- அங்கீகாரம் இல்லாத பல்கலைக்கழகங்களிலிருந்து பெறப்பட்ட பட்டங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.
- ஒரே நேரத்தில் தொலைநிலைக்கல்வி இயக்ககவழி இரு பாடப் பிரிவுகளுக்குச் சேர்க்கை அனுமதி வழங்கப்படும். (காண்க : முகப்புப் பக்கம்)
- கல்லூரிகள் அல்லது பல்கலைக் கழகங்களில் முழுநேரமோ/ தொலைநிலை வாயிலாகவோ பட்டம் படிப்பவர்கள் இங்குப் பட்டயம் (Diploma)/சான்றிதழ் (Certificate) படிப்பில் சேர அனுமதிக்கப்படுவர்.

### பல்கலைக்கழகத்தில் நேரடிச் சேர்க்கை (Spot Admission)

தகவல் மையங்கள் அருகாமையில் இல்லாதவர்கள் நேரடியாகப் பல்கலைக்கழகத் தொலைநிலைக் கல்வி இயக்ககத்தில் விண்ணப்பங்களைப் பெற்றுச் சேர்ந்து கொள்ளலாம். அவ்வாறு நேரடிச் சேர்க்கைக்கு விரும்புவோர் கீழ்க்காணும் ஆவணங்களைக் கொண்டு வர வேண்டும்.

- விண்ணப்பப்படிவம் மற்றும் சான்றிதழ்களின் சான்றொப்பமிடப்பட்ட (attested) **மிகத் தெளிவான** நகல்கள் (கல்வித் தகுதி, வயது முதலியன) இருந்தால் மட்டுமே சேர்க்கை செய்யப்பெறும்.
- மூல ஆவணச் சான்றுகள் மற்றும் மாற்றுச் சான்றிதழ் (Certificates in Original, Transfer Certificate) போன்றவை **10ஆம் வகுப்பு, +2 வகுப்பு, பட்டப்படிப்பு - மதிப்பெண் பட்டியல், தற்காலிகச் சான்றிதழ்** அல்லது **பட்டச் சான்றிதழ், மாற்றுச் சான்றிதழ்** அல்லது **படிப்பு நிறைவுச் சான்றிதழ், சாதிச் சான்றிதழ்** என்ற வரிசையில் இடம்பெற வேண்டும்.
- விண்ணப்பப் படிவத்திற்கும், அடையாள அட்டைக்கும் தேவையான பாஸ்போர்ட் அளவிலான ஒளிப்படம்(Photo)-2
- மூல ஆவணச் சான்றுகள் சரிபார்க்கப்பட்ட பின்னர்ச் சேர்க்கைக்கு அனுமதிக்கப்படுவர். நேரடிச் சேர்க்கை பெறுவோர் கட்டணங்களுக்கான தொகையினைப் பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள BOI வங்கியில் காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை நேரில் செலுத்தலாம். **செலுத்தப்பட்ட கட்டணத் தொகை எவ்விதக் காரணத்தை முன்னிட்டும் மீள**



Scanned by CamScanner

வழங்கப்பட மாட்டாது; ஈடுகட்டப்படவுமாட்டா.

மூல ஆவணங்கள் சரிபார்க்கப்பட்ட பின்னர்க் கற்போர்களுக்கு அவை மீள அளிக்கப்படும்.

நேரடிச் சேர்க்கை இயக்குநரால் உறுதி செய்யப்படும். தகுதியில்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

### தகவல் மைய வழி சேர்க்கை (Admission by Information Centres)

ஒவ்வொரு பாடத்திட்டத்திற்குமுரிய கட்டண விவரங்கள் தனியே தெரிவிக்கப்பட்டுள்ளன (காண்க பக்.30-49)

தகவல் மையங்களின் மூலம் வரும் மாணவர்கள் மொத்தக் கல்விக் கட்டணத் தொகையில் 80 விழுக்காட்டுத் தொகையையும். செயல்முறைப் பயிற்சிக் கட்டணத்தையும் தமிழ்ப் பல்கலைக்கழகத் தொலைநிலைக் கல்வி இயக்கக இணையதளத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ONLINE PAYMENT என்ற இணைப்பு வழியாக செலுத்தி மின் இரசீதினை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். தகவல் மையப் பங்கான எஞ்சிய 20 விழுக்காட்டுத் தொகையைத் தகவல் மைய ஒருங்கிணைப்பாளரிடம் செலுத்த வேண்டும்.

தகவல் மையங்கள் மூலம் தொலைநிலைக்கல்வி இயக்கக இணையதளவழி பதிவு செய்து அனுப்பி வைக்கப்படும் விண்ணப்பங்கள் இவ்வியக்ககத்தால் பரிசீலிக்கப்பட்டு உறுதியானபின், சேர்க்கை எண்ணுடன் அடையாள அட்டை அனுப்பிவைக்கப்படும். அவற்றை உரிய கல்வி மையங்கள்வழி கற்போர் பெற்றுக் கொள்ளலாம்.

**கல்விச் சான்றுகளின் நகல்களில் தகவல் மைய ஒருங்கிணைப்பாளர்கள் சான்றொப்பம் செய்யலாம்.**

**கல்விக் கட்டணத்தை(பல்கலைக்கழகப் பங்கு) ரொக்கமாகத் தகவல் மையங்களில் செலுத்துதல் கூடாது என அறிவுறுத்தப்படுகிறது.**

**கற்போர், இணைப்பில் குறிப்பிட்டுள்ள கட்டணத் தொகையைத் தவிர யாதொரு கட்டணத்தையும் தகவல் மையங்களுக்குச் செலுத்த வேண்டியதில்லை.**

**இணைந்த கல்வித் திட்டப் பாடங்களுக்குரிய மைய பங்குத் தொகையினை மைய ஒருங்கிணைப்பாளர்கள் எடுத்துக் கொண்டு மீதித் தொகையினை தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் செலுத்த வேண்டும்,**

**தகவல் மைய வழி செலுத்தப்படும் கட்டணங்கள் அனைத்தும் ONLINE PAYMENT வழியாக மட்டுமே செலுத்தி மின்இரசீதினை அனுப்ப வேண்டும். வரைவோலையோ/ பிறவங்கி செலுத்துச்சீட்டோ அனுமதிக்கப்படமாட்டாது.**

### தாமதக் கட்டணம் (Late Fee)

இளநிலை/ முதுநிலை கற்போர் இரண்டாம் மற்றும் மூன்றாம் ஆண்டுக் கல்விக்கட்டணத்தை ஒவ்வொரு **ஆண்டும் கால அட்டவணையில் (பக்.26) குறிப்பிட்டுள்ள நாளுக்குள்** செலுத்த வேண்டும். அவ்வாறு செலுத்தாத நிலையில், கல்விக்கட்டணத்துடன் **ஆண்டொன்றுக்கு ரூ.250/- வீதம், கட்டணம் செலுத்தும் நாள்வரை கணக்கிடப்பட்டு, ஒறுப்புக் கட்டணம் கூடுதலாக** வசூலிக்கப்படும்.

## கட்டணச் சலுகைகள்(Fees Concession)

### 1. முன்னாள் மாணவர்கள்

தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் தொலைநிலைக் கல்வி வாயிலாகவோ அல்லது முறைக்கல்வி(Regular) வாயிலாகவோ பயின்று தேர்ச்சி பெற்றிருக்கும் முன்னாள் மாணவர்களுக்கு மொத்த கல்விக்கட்டணத்தில் 10% கட்டணச் சலுகை வழங்கப்படும்.

### 2. மாற்றுத்திறனாளிகள்

மருத்துவச் சான்றிதழின் அடிப்படையில், பார்வையற்ற மற்றும் மாற்றுத்திறன் படைத்த மாணவர்களுக்குக் கல்விக் கட்டணம் மற்றும் தேர்வுக் கட்டணம் ஆகியவற்றைச் செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கப்படும். ஆனால், மற்றக் கட்டணங்களான சேர்க்கைக் கட்டணம், பதிவுக் கட்டணம், தகுதிக் கட்டணம், சிறப்புக் கட்டணம், செய்முறைக் கட்டணம், அஞ்சல் செலவுக் கட்டணம், மதிப்பெண் சான்றிதழ் கட்டணம் யாவற்றையும் செலுத்துதல் வேண்டும். 40 விழுக்காடு ஊனம் இருக்க வேண்டும்.

### 3. கிராமப்புற மாணவர்கள்

கிராமப்புற மாணவர்களுக்கு 10% கல்விக் கட்டணச் சலுகை வழங்கப்படும். இதற்குத் தகுதியாக ஆண்டு வருமானம் ரூ.72,000/-க்கு மிகாமல் இருக்க வேண்டும். இதற்கான வட்டாட்சியரிடமிருந்து வருமானச்சான்று மற்றும் இருப்பிடச் சான்று பெற்று விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும்.

**தொலைநிலைக் கல்வி விண்ணப்பம், பாடங்கள் தொடர்பான விவரங்களுக்கு தொலைபேசி 04362 - 227152**

**தேர்வுத் தொடர்பான அனைத்து விவரங்களுக்கும் தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர் தொலைபேசி 04362 - 227845**



Scanned by CamScanner

## 4. மூத்த குடிமக்கள்

பிறந்த தேதி அடிப்படையில் 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்குக் கல்விக் கட்டணத்தில் 10% சலுகை வழங்கப்படும்.

## மாண்புமிகு முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் வழி கல்வி உதவித் தொகை

அரசு விதிகளின்படி, முதுநிலை மற்றும் தொழிற்படிப்பு பயிலும் மாணவர்களுக்கு உழவர் பாதுகாப்புக் கல்வி உதவித் தொகை பெறுவதற்கு பரிந்துரை செய்யப்படும். மாணவர்கள் உழவர் அட்டை, குடும்ப அட்டை, சாதிச்சான்று, பல்கலைக்கழக அடையாள அட்டை ஆகியவற்றின் நகலுடன் விண்ணப்பம் அளித்து தொலைநிலைக்கல்வி இயக்கக இயக்குநரின் பரிந்துரையின் அடிப்படையில் மாணவர்களே கல்வி உதவித் தொகை பெற்றுக் கொள்ளலாம்.

## சேர்க்கை எண் (Enrollment Number)

ஒவ்வொரு பாடப் பிரிவில் சேரும் மாணவருக்கும் சேர்க்கை எண் ஒன்று அளிக்கப்படும். மாணவர்கள் இவ்வியக்ககத்திற்குக் கடிதம் மூலம் தொடர்பு கொள்ளும் போது இவ்வெண்ணைக் கட்டாயமாகக் குறிப்பிட வேண்டும்.

ஒவ்வொரு மாணவருக்கும் அந்தந்தப் பாடப் பிரிவிற்குரிய சேர்க்கைக்கு அனுமதி அளித்த பின்னர், அவர்களின் ஒளிப்படத்துடன் கூடிய அடையாள அட்டை இயக்குநர் அவர்களின் கையொப்பம் மற்றும் தொலைநிலைக் கல்வி இயக்கக முத்திரையுடன் அளிக்கப்பெறும். இவ்வடையாள அட்டை குறிப்பிட்ட படிப்புக் காலம் வரை தகுதியுடையதாகும். அடையாள அட்டையைத் தேர்வுக் காலங்களிலும், கல்வி மையங்களில் நடைபெறும் பயிற்சி வகுப்புகளிலும் கேட்கும்பொழுது காண்பிக்க வேண்டும்.

அடையாள அட்டையைத் தொலைத்துவிட்டால், மாற்று அடையாள அட்டையைப் பெற (Duplicate Identity Card) வேண்டுதல் கடிதம் அளித்து அஞ்சல் வில்லை அளவிலான ஒளிப்படத்தையும், ONLINE PAYMENTவழி ரூ.100/-செலுத்தியதற்கான மின் இரசீதினையும் இணைத்து இயக்ககத்தில் மாற்று அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்ளலாம்.

## பாடங்கள் அனுப்புதல் (Despatch of Lessons)

பாடப்புத்தகங்கள் தேவைப்படும் மாணவர்கள் கல்விக் கட்டணம் செலுத்தியபின் தொலைநிலைக்கல்வி இயக்ககத்தில் நேரில் பெற்றுக் கொள்ளலாம். பாடப்புத்தகங்கள் இருப்பில் இல்லையெனில் ஓரிரு மாதங்களில் (அஞ்சல் அல்லது கூரியரில்) அனுப்பி வைக்கப்படும்.

மையங்களின்வழி சேர்க்கைப் பெற்ற மாணவர்களுக்கு அந்தந்த மாணவர்களது முகவரிக்கே பாட நூல்கள் அனுப்பி வைக்கப்படும்.

இரண்டாம் ஆண்டுக்கான பாடப் புத்தகங்கள் தேவைப்படும் மாணவர்கள் பாடப்புத்தகத்திற்கு உரிய தொகை செலுத்தியிருப்பின், அந்தந்த ஆண்டின் முழு கல்விக் கட்டணம் செலுத்தப்பட்டதை உறுதி செய்தபின் அஞ்சலில் அனுப்பி வைக்கப்பெறும்.

இரண்டாம் ஆண்டு கல்விக் கட்டணம் செலுத்துவதற்கு பல்கலைக் கழகத்திலிருந்து எந்த அறிவிப்பும் அனுப்பப்படமாட்டாது. மாணவர்களே கல்விக் கட்டணத்தை சேர்க்கை செய்யப் பெற்ற மையம்வழி செலுத்த வேண்டும்.

## தொடர்பு வகுப்புகள் (Personal Contact Programmes)

அனைத்துப் பாடப் பிரிவுகளின் தொடர்பு வகுப்புகளும் சனி, ஞாயிறு மற்றும் அரசு பொது விடுமுறை நாட்களில் கற்போர்களின் சேர்க்கையைப் பொறுத்துப் **பல்கலைக்கழகம் தெரிவிக்கும் சில குறிப்பிட்ட மையங்களில் நடத்தப்படும்.**

பாடப்பிரிவுகளுக்குத் தொடர்பு வகுப்புகள் கட்டாயமானவை. அவற்றிற்கு மாணவர் தம் வருகைப் பதிவு கணக்கில் கொள்ளப்படும்.

தொடர்பு வகுப்புகள் நடத்தப்படும் நாள், நேரம், இடம் ஆகிய யாவும் சேர்க்கை உறுதியான பின்னர் ஓரிரு மாதத்திற்குள் தெரிவிக்கப்படும்.

இணைந்த கல்வித் திட்டங்களுக்கான தொடர்பு வகுப்பு மற்றும் பயிற்சி வகுப்பு விவரங்கள் தனியே கொடுக்கப்பட்டுள்ளன (காண்க: பக். 42-53).

கட்டாயத் தொடர்பு வகுப்புப் பாடப்பிரிவினருக்குப் பயிற்சி வகுப்பின் இறுதி நாளில் வருகைச் சான்றிதழ் (Attendance Certificate) வழங்கப்படும். இச் சான்றிதழின் நகலைப் பல்கலைக்கழகத் தேர்வுக்கு விண்ணப்பிக்கும் போது இணைத்து அனுப்பி வைக்க வேண்டும். அவ்வாறு அனுப்பாதவர்கள் தேர்வு எழுத அனுமதிக்கப்படமாட்டார்கள்.

வருகைச் சான்றிதழைத் தொலைத்தவர்கள் ரூ.100/- செலுத்தி மாற்று வருகைச் சான்றிதழ் (Duplicate Attendance Certificate ) பெற்றுக் கொள்ளலாம்.

நிர்வாகக் காரணம் அல்லது எதிர்பாரா நிகழ்வுகளின்போது தொலைநிலைத் தொடர்பு வகுப்புகளை இயக்ககம் பணி நாளிலேயே நடத்த வேண்டிய தேவை ஏற்படின் அந்நாட்களிலும் வகுப்புகள் நடைபெறும்.

## பயிற்சி வகுப்புகள் (Training Programmes)

தொடர்பு வகுப்புகள் முடிந்தபின்னர் ஒருசில அறிவியல் மற்றும் கல்வியியல் பாடங்களுக்குப் பயிற்சி வகுப்புகள் கட்டாயமாக நடத்தப்பட வேண்டியுள்ளன. பயிற்சி வகுப்பு விகிதங்கள் தனியே தொடக்கத்திலேயே தெரிவிக்கப்பெறும். அனைத்துப் பாடங்களுக்கும்



Scanned by CamScanner

தமிழ்ப்பல்கலைக்கழக வளாகத்திலேயே பயிற்சி வகுப்பு நடைபெறும்.

## முகவரி மாற்றம்
## (Change of Address)

மாணவர்கள் விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள முகவரிக்கே எல்லாக் கடிதங்களும், புத்தகங்களும் அனுப்பிவைக்கப்படும். முகவரி மாற்றப்படின், உரிய விவரக் கடிதத்தை ரூ.100/-செலுத்தியதற்கான மின் இரசீதுடன் இணைக்கப்பட்ட படிவத்தில் கையொப்பமிட்டு அனுப்பி வைக்க வேண்டும். அவ்வாறு தெரிவிக்காத நிலையில் பழைய முகவரிக்கே தொடர்புகள் மேற்கொள்ளப் பெறும். முகவரி மாற்றப்படின் உரிய விவரத்தை அருகிலுள்ள அஞ்சல் நிலையத்திலும் உடன் தெரிவிக்குமாறு கற்போர் அறிவுறுத்தப்படுகின்றனர்.

## பெயர் மாற்றம்
## (Change of Name)

விண்ணப்பத்தில் உள்ள பெயரை மாற்ற (Change of Name) வேண்டுமெனில் அப்பெயருக்கு உரிய அரசு பதிவிதழ் சான்று (Government Gazette) பெற்றிருக்க வேண்டும். மேலும், படிப்புக் காலம் முடிந்த பின் பெயரை மாற்ற விரும்பினால், ஏற்கெனவே, தேர்ச்சி பெற்ற பல்கலைக்கழகம்/பள்ளி/கல்லூரி ஆவணங்களில் பெயரை மாற்றிய விவரங்களுடன் இவ்வியக்ககத்திற்கு அனுப்பி வைத்தால் பரிசீலனை செய்யப்படும். இவ்விரண்டிற்கும் எழுத்துவழி மற்றும் ஆவணங்களுடன் ரூ.300/- செலுத்தியதற்கான மின் இரசீதினை இணைத்து விண்ணப்பிக்க வேண்டும்.

## பாடப்பிரிவு மாற்றம்
## (Change of Programme/Subjects)

ஒரு பாடப் பிரிவில் இருந்து மற்றொரு பாடப் பிரிவில் சேர்வதற்கு, சேர்க்கை உறுதிக்கான காலக் கெடுவான 30 நாட்களுக்குள் ரூ.500/- செலுத்தியதற்கான மின் இரசீதினை இணைத்து விண்ணப்பிக்க வேண்டும் அல்லது முதல் தொடர்பு வகுப்பில் கலந்து கொள்ளுவதற்கு முன்னர் (before attending the first PCP) விண்ணப்பிக்கலாம். காலந்தாழ்த்தி வரும் வேண்டுகோளைக் கருத இயலாது. செலுத்திய தொகையும் மீள வழங்கப்படமாட்டாது.

## படிப்பு நிறைவுச் சான்றிதழ்
## (Course Completion Certificate)

ஒரு பாடப் பிரிவில் முழுமையான காலம் முடிந்த நிலையில் படிப்பு நிறைவுச் சான்றிதழ் வேண்டுவோருக்குப் பாடப்பிரிவின் அனைத்துக் கட்டணங்களும் செலுத்தப்பெற்ற நிலுவையில்லாத நிலையில் மட்டுமே சான்றிதழ் வழங்கப்படும்.

படிப்புச் சான்றிதழ் (Bonafide Certificate) பெறுவதற்கு ரூ.300/-செலுத்தியதற்கான மின் இரசீதினை இணைத்து விண்ணப்பிக்க வேண்டும். பல்கலைக்கழகம் அவ்வப்பொழுது கடைப்பிடிக்கும் நடைமுறைகளைப் பின்பற்றி அவ்விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டுச் சான்றிதழ் வழங்கப்படும்.

## இடைவிலகல் சான்றிதழ்
## (Discontinued Certificate)

இடைவிலகல் சான்றிதழ் கோரும் ஆண்டு வரையிலான கல்விக் கட்டணத் தொகைகள் முழுவதும் செலுத்தப்பட்ட பின்னரே விண்ணப்பம் கருதப்பெறும்.

## மாற்றுச் சான்றிதழ்
## (Transfer Certificate)

அறிமுகநிலைப்படிப்பு பயிலும் மாணவர்கள் மட்டும் ரூ. 300/-செலுத்தியதற்கான மின் இரசீதினை இணைத்து விண்ணப்பித்துப் புதிய மாற்றுச் சான்றிதழைப் பெற்றுக் கொள்ளலாம்.

## குறை தீர்க்கும் மையம்
## (Grievance Cell)

கற்போர், தங்களுடைய நியாயமான குறைகளைப் பெயர், பாடப்பிரிவு, சேர்க்கை எண் ஆகிய விவரங்களை நிரப்பித் தொலைநிலைக் கல்வி இயக்கக இயக்குநருக்குத் தெரிவிக்கலாம். (காண்க: பக்.69)

## விசாரணை மற்றும் தொடர்புக்கு
## (Enquiries and Contact)

தொலைநிலைக்கல்வி இயக்ககத்தில் பயிலும் மாணவர்கள் தங்களுக்குத் தேவைப்படும் அனைத்து விவரங்களையும் (பாடப்பிரிவு விவரம், விண்ணப்பம், சேர்க்கை உறுதிசெய்தல், அடையாள அட்டை, சேர்க்கை எண், பாடப்புத்தகங்கள், தொடர்பு வகுப்புகள், பெயர்/பாடப்பிரிவு/முகவரி மாற்றம், கட்டணம் செலுத்தியதற்கான சான்றிதழ், கல்விக் கட்டணம், இரண்டாம் ஆண்டுக்கு நேரடியாகச் சேர்தல், திட்ட அறிக்கை சமர்ப்பித்தல் போன்றவை) பின்வரும் முகவரிக்கு விண்ணப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

**இயக்குநர்**
**தொலைநிலைக் கல்வி இயக்ககம்**
**தமிழ்ப் பல்கலைக்கழகம்**
**தஞ்சாவூர்-613 010**
**தமிழ்நாடு**

தொலைபேசி : 04362-227152
தொலைநகலி: 04362-227434
(Fax)



Scanned by CamScanner